உ

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# பரிசுத் தினம்

## 1982-11-06

பிரதம விருந்தினர்

**வைத்திய கலாநிதி பேராசிரியர் இ. கனகசுந்தரம்**

உ

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| தேவாரம் | — | செல்வன் க. சபேசன் |
| வரவேற்புரை | — | செல்வன் சி. இராஜேந்திரா |
| அறிக்கை | — | அதிபர் |
| பரிசு விழங்கல் | — | திருமதி சொ. கனகசுந்தரம் |
| தாளவாத்தியம் | — | கல்லூரி மாணவர்கள் |
| பரிசுத்தின உரை | — | பேராசிரியர் இ. கனகசுந்தரம் |
| நாடகம் | | (மாவட்டத்தில் முதல் இடம் பெற்றது) கல்லூரி மாணவர்கள். |
| நன்றியுரை | — | திரு W. S. செந்தில்நாதன் (செயலர் பழைய மாணவர் சங்கம்) |
| | — | செல்வன் K. குமாரசூரியர் (சிரேஷ்ட மாணவ முதல்வர்) |
| கல்லூரிக் கீதம் | | |

## அதிபரின் அறிக்கை — 1981, 1982

பெருமதிப்புக்குரிய பிரதம விருந்தினர் பேராசிரியர்
வைத்திய கலாநிதி இ. கனகசுந்தரம் அவர்களே
திருமதி கனகசுந்தரம் அவர்களே
பெற்றோர்களே,
பழைய மாணவர்களே,
அன்பர்களே.
ஆசிரியர்களே,

எமது பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்த உங்களனைவரையும் அன்புரிமையுடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர் கனகசுந்தரம் அவர்களே!

தாங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவர்களில் ஒருவர் என்பதைப் பெருமையுடனும் மகிழ்வுடனும் தெரிவிக்கின்றேன். காரைநகரில் வாழ்வாங்கு வாழ்ந்த பொன்னுடையார் வழித்தோன்றலாய் ஆசிரியத் தொழிலின் முன்னோடிகளில் ஒருவராய் சீரும் சிறப்பும் பெற்று, விளங்கிய தங்கள் தந்தையாரின் அடிச்சுவட்டில் - துறைவேருக அமைந்தாலும் - உடற்பிணி அகற்றும் பெரும் ஆசானுய் நீங்கள் உலகப்புகழ் படைத்து நிற்பதைக் கண்டு நாம் அகமிக மகிழ்கிறோம் இக்கல்லூரியில் கற்று மருத்துவக் கல்லூரியில் பிரவேசம் பெற்று MBBS தேர்வில் முதலாம் வகுப்பில் தேறிய பின்னர் மருத்துவக் கல்லூரியிலேயே விரிவுரையாளராக அமர்ந்து கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் சென்று கலாநிதிப் பட்டம் பெற்றீர்கள். அதன்பின் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் உடற்கூற்றியற்துறைத் துணைப் பேராசிரியராகக் கடமையாற்றும் பொழுது, தங்கள் திறம் தெரிந்து சூடான் பல்கலைக்கழகம் தங்களை அழைத்து பேராசிரியப் பதவியைத்தந்தமையும் அதன்பின் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடத் தலைவராகப்

பணி புரிந்ததும், வேதனத்தின் கனத்தை மறந்து தாய் நாட்டுச் சேவைக்காக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தலைமையைத் தாங்கிப் பணி புரிவதும் நாடறிந்தவையே. மேலும் தங்கள் உடற்கூற்றியற்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் தனித்துவத்தைப் பெற்றிருப்பதையும், அக் கட்டுரைகளில் நிறுவியுள்ள கருத்துக்கள் அண்மையில் வெளிவந்த உடற்கூற்றியற்துறை சார்ந்த நூல்களில் மேற்கோள் காட்டி விதந்து உரைக்கப்பட்டிருப்பதையும் கண்டு தங்கள் ஆழ்ந்த அறிவியற் புலமையை நாம் மெச்சுகின்றோம். இவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தங்களின் சைவசமயப் பற்றும் தமிழ்ப் பற்றும் ஒழுக்கமும், முருகபக்தியும் எமக்கு வழி காட்டுவனவாய் அமைந்துள்ளன.

ஐய!

நின் வருகையும் சொற் பெருக்கும் எம் கல்லூரி இளைஞரின் சிந்தனைக்கு விருந்தாகி மகிழ்விக்கும் என்பதில் எமக்குச் சற்றேனும் ஐயமில்லை,

திருமதி கனகசுந்தரம் அவர்களே!

உழைப்பால் உயர்ந்து இந்நாட்டின் தலைநகரில் தமிழனின் வணிகத்திறனை நிலைநாட்டிய பெருமகன் ''ரைம்ஸ்'' சங்கரப்பிள்ளையின் மகளாகியதோடல்லாமல் அவர் தேடிப்பெற்ற மகனின் துணையாகி பேராசிரியரின் மருத்துவப் பணிக்கு உறுதுணையாக நிற்கும் தாயே தங்களை மனம் மகிழ்ந்து வரவேற்கிறோம். பரிசில்களை வழங்கி எம்மைக் கௌரவிக்கும்படி வேண்டுகிறோம்.

1980ம் ஆண்டுப் பரிசளிப்பு விழாவில் யான் சமர்ப்பித்த அதிபரின் அறிக்கையில் பாடசாலை நிர்வாகம் பற்றிய கருத்துக்களை கூறுமிடத்து பாடவிதானம், பாடத்திட்டங்கள் ஆசிரியரின் வழிகாட்டி நூல்கள், பாடநூல்கள் உரிய காலத்தில் பாடசாலைகளை சென்றடையாமையினால் ஏற்படும் இடர்பாடுகள் பற்றி குறிப்பிட்டிருந்தேன். இவ்விடர்ப்



பாடுகள் நீங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டிற்குரியதாம். க. பொ. த (சா. த) க. பொ. த. (உயர்தர) ஆகிய பொதுப் பரீட்சைகளை டிசம்பர் மாத விடுதலை காலத்தில் நடாத்தி விடைத்தாள்கள் திருத்தும் கடமைகளையும் விடுதலை காலத்தில் ஒப்பேற்றுவதனால், பாடசாலை நாட்களில் ஆசிரியர்கள் தமது அன்றாட கற்பித்தலை குழப்பமின்றிச் செய்வதற்கு உதவியளிக்குமென்ற கருத்தினையும் தெரிவித்திருந்தோம். இக்கருத்திற்கமைவாக கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதையும் காண்கின்றோம். 1983ம் ஆண்டிலிருந்து இரு பரீட்சைகளும் டிசம்பர் மாதத்தில் அமைச்சு நடத்தப்போவதாக கூறியுள்ளது. பாடசாலை விடுமுறைகால அமைப்பினை, பரீட்சை விடைத்தாள் திருத்தும் தேவையுடன் இணைத்து ஏற்ற ஒழுங்குகளை செய்துள்ளனர். எமது பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம். யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய இடங்களிலும் பல பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லாமையினால் ஏற்பட்டுவரும் தாக்கங்களைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். அமைச்சும் இதனை உணர்ந்து கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ள போதிலும் நிரந்தர அதிபர்களின் நியமனங்கள் போதியளவில் நடைபெறா திருத்தல் வருத்தத்திற்குரியதாம். கூடிய விரைவில் இப்பிரச்சினையையும் தீர்ப்பதனால் பாடசாலைகளை மேலும் பல வழிகளில் செவ்வனே இயங்கச் செய்வதற்கு வாய்ப்பாகும் என்று கூறிக்கொள்கிறோம்.

புதிய பாடநூல்களை வகுத்துள்ள இன்றைய அமைச்சு அவற்றை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. ஆரம்பத்தில் இலவச நூல்களின் விநியோகம் சற்றுத் தாமதப் பட்டதாயினும் சென்ற ஆண்டிலிருந்து பெரும்பாலான பாட நூல்கள் மாணவர்களை உரிய காலத்தில் வந்தடைந்துள்ளமை பாராட்டிற்குரியதாம், ஏறிவரும் விலைவாசிகளினால் பெற்றோர் அடைந்துள்ள குடும்பப் பழுவின் தாக்கத்தை ஓரளவு

இவ்விலவச பாடநூல்களின் விநியோகம் குறைத்துள்ளது. கல்வி அமைச்சின் இத் தொண்டினை நாம் பாராட்டாம லிருக்க முடியாது.

கல்வி வெள்ளை அறிக்கையின் சிபாரிசுகள் பல சிறப் பான அம்சங்களை கொண்டதாக உள்ளன. அவற்றை நாம் வரவேற்கிறோம். ஆசிரியர் சேவை, கல்விச் சேவை பற்றிய சீர்திருத்தங்கள், இவ்விரு சேவைகளில் இன்று காணப்படும் குறைபாடுகளை பெருமளவில் நீக்குவதற்கு உதவும் என நம்புகின்றோம். கொத்தணிப் பாடசாலைகளின் அமைப்புபற்றிய கருத்து வேறுபாடுகளிற்கு மதிப்பளித்து அதனை அமுலாக்கும் திட்டத்தை அரசு பிற்போட்டதோடு கல்விமான்களை அழைத்து அம்முறைபற்றிய கருத்துப் பரி மாற்றம் செய்துள்ளது. அதே நேரத்தில் இத்திட்டத்தை பரீட்சார்த்தமாக பல கல்வி மாவட்டங்களில் முன்னோடி யாக நடாத்தி பெறப்படும் அனுபவத்தைக் கொண்டு தீர்க் கமான முடிவெடுப்பதென பிற்போட்டுள்ளமை வரவேற் கத்தக்கதாம். நன்ருகச் சிந்தித்து எடுக்கப்படும் முடிவு பொருத்தமானதாகவும், யாவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமாகவும் அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

மாணவர் தொகை:

| | | | |
|---|---|---|---|
| தரம் | 6 — 9 | - | 831 |
| தரம் | 10 | - | 257 |
| தரம் | 11 — 12 | - | 553 |
| மொத்தம் | | - | 1641 |

புதிதாகச் சேர்ந்தவர்கள்:

| | | | |
|---|---|---|---|
| தரம் | 6 | - | 194 |
| தரம் | 7 — 12 | - | 51 |
| மொத்தம் | | - | 245 |



பரீட்சைப் பெறுபேறுகள்:

க. பொ. த. (சாதாரணம்) டிசம்பர் 1980

6ம் அதற்கு மேற்பட்ட பாடங்களிலும் சித்தியடைந்தோர் - 235

5 பாடங்களில் சித்தியடைந்தோர் - 30

மொத்தமாக 204 அதிவிசேட சித்திகள், பெறப்பட்டன

ஐந்தும் அதற்கு மேற்பட்ட பாடங்களிலும் சித்திகளைப் பெற்ற மாணவர்களின் தொகை - 265

க. பொ. த. (சாதாரணம்) டிசம்பர் 1981

6ம் அதற்கு மேற்பட்ட பாடங்களிலும் சித்தியடைந்தோர் - 92

5 பாடங்களில் சித்தியடைந்தோர் - 10

மொத்தமாக 35 அதிவிசேட சித்திகள் பெறப்பட்டன

ஐந்தும் அதற்கு மேற்பட்ட அதிவிசேட சித்திகளைப் பெற்ற மாணவர் தொகை - 01

க. பொ. த (உயர்தரம்) ஆகஸ்ட் / ஏப்ரல் 1980

நான்கு பாடங்களிலும் சித்தியடைந்தோர்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானப் பிரிவு | – | 124 |
| வர்த்தகம் / கலை | – | 09 |
| மொத்தம் | - | 133 |

மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானப் பிரிவு | - | 39 |
| வர்த்தகம் / கலை | – | 09 |
| மொத்தம் | - | 48 |

மொத்தமாக 128 அதிவிசேட சித்திகள் பெறப்பட்டன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 அதிவிசேட | சித்திபெற்ற | மாணவர் | தொகை | | 01 |
| 3 | ,, | ,, | ,, | ,, | 06 |
| 2 | ,, | ,, | ,, | ,, | 06 |

க. பொ. த. (உயர்தரம்) ஆகஸ்ட் ஏப்பிரல் 1981

4 பாடங்களில் சித்தியடைந்தோர்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | 106 |
| வர்த்தகம் / கலை | - | 12 |
| மொத்தம் | - | 118 |

மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | 31 |
| வர்த்தகம் / கலை | - | 12 |
| மொத்தம் | - | 43 |

மொத்தமாக 133 அதிவிசேட சித்திகள் பெறப்பட்டன.

| | |
|---|---|
| 4 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றவர்கள் | - 02 |
| 3 பாடங்களில் ,, ,, ,, | - 02 |
| 2 ,, ,, ,, ,, | - 09 |

செல்வன் சிவப்பிரகாசம் சிவராஜன் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்றதோடு மொத்தமாக முந்நூற்று அறுபது புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று முழுப் பரீட்சையிலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க. பொ. த. (உயர்தரம்) 1980 பரீட்சைகளில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெற்ற மாணவர்களின் விபரம்:

| | |
|---|---|
| பொறியியல் துறை | 14 |
| மருத்துவத்துறை | 5 |
| பௌதிக / உயிரியல் விஞ்ஞானத்துறைகள் | 21 |
| வர்த்தகத்துறை | 2 |
| மொத்தம் | 42 |



யாழ் மாவட்டத்திலிருந்து மிகக் கூடுதலான மாணவர்கள் எமது கல்லூரியிலிருந்தே 1980 இல் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளார்கள்.

க. பொ. த. (உயர்தரம்) ஓகஸ்ட் 1981 பரீட்சைகளில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெற்ற மாணவர்களின் விபரம்:

| | |
|---|---|
| பொறியியல் துறை | 18 |
| மருத்துவத் துறை | 4 |
| பௌதிக / உயிரியல் விஞ்ஞானத்துறை | 24 |
| மொத்தம் | 46 |

யாழ் மாவட்டத்திலிருந்து மிகக் கூடுதலான மாணவர்கள் எமது கல்லூரியிலிருந்தே 1981 இல் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளார்கள்.

ஆசிரியர்கள்:

ஓய்வு பெற்றோர்:

பின்வரும் ஆசிரியர்களாகிய திரு. இ. சிவனேசன் B. A.
திரு. க. செல்வரத்தினம் B. A.,
பட்டப்பின் பயிற்சி
திரு க. புவனபூஷணம் B. Sc.,
பட்டப்பின் பயிற்சி
திரு மு. சிவஞானரத்தினம் BSc
பட்டப்பின் பயிற்சி
திரு. செ. செல்வநாயகம் B Sc
பட்டப்பின் பயிற்சி ,

வித்துவான் திரு. ச. கந்தசாமி
பயிற்றப்பட்ட தராதரப்பத்திர ஆசிரியர்

வித்துவான் திரு. சி. ஆறுமுகம்
பயிற்றப்பட்ட தராதரப்பத்திர ஆசிரியர்

திரு. இ. மகாதேவா
சிரேஷ்ட தராதரப் பயிற்சி ஆசிரியர்

கல்லூரியின் பல்வேறு கலைத்திட்டப் பிரிவுகளிலும் சிறந்த பணியாற்றியபின் ஓய்வு பெற்றுள்ளார்கள். அவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்து நன்றி கூறுகின்றோம்.

**மாற்றம் பெற்றோர்:**

திரு. கு. உதயகுமார் B. A., S. L. E. S Class V யா / கொழும்புத்துறை மகாவித்தியாலய அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளார்.

திரு. நா ஸ்ரீவெங்கடேசன் B. Sc. மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.
அவர்களை வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

**படிப்பு லீவில் சென்றோர்:**

திரு. தி. கமலநாதன் B. A., திரு. ஆ. இராஜ கோபால் B. A. ஆகியோர் கல்வித்துறையில் முதுமாணிப் பட்டம் பெறுவதற்காகப் படிப்புலீவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்துள்ளனர்.

**சம்பளமற்ற லீவில் சென்றோர்:**

திரு பொ. மகேந்திரன் B. A. 1½ ஆண்டுகால சம்பள மற்ற லீவு பெற்று நைஜீரியாவில் ஆசிரியக் கடமை ஏற்றுச் சென்றுள்ளார்.

**புதிதாகச் சேர்ந்தவர்கள்:**

திரு. க. கதிர்காமத்தம்பி B. Sc., பட்டப்பின் பயிற்சி
திரு. A. மகாதேவன் B. Sc., பட்டப்பின் பயிற்சி
திரு. V. செல்லையா B. A. பட்டப்பின் பயிற்சி
திரு. தி. கிருஷ்ணகுமார் B. A.,
திரு. சு. சிவரத்தினம் விசேட பயிற்சி விஞ்ஞானம்
ஆகியவர்களை வரவேற்கின்றோம்.



**இதர ஊழியர்கள்:**

திரு. S. M. இராமநாதன் ஆய்வுகூட உதவியாளர் கொழும்பு இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

திரு. சோ. இலகுநாதன் ஊழியர்
பதவியிலிருந்து விலகியுள்ளார்
இவர்களின் சேவைக்கு எமது நன்றி

திரு. க. குணம் ஆய்வுகூட உதவியாளர் இரண்டாந்தரம் திரு. தேசியநாதன், திரு. தேவகுலநாயகம் (ஊழியர்கள்) புதிதாக இங்கு பதவியேற்றுள்ளனர். அவர்களை வரவேற்கின்றேன்.

**அனுதாபங்கள்:**

எமது கல்லூரியின் முன்னைநாள் உபஅதிபராகவும், அதிபராகவும் பதவி வகித்துக் கல்லூரியை முன்னேற்றிய திரு. V. M. ஆசைப்பிள்ளை அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆறாத கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவரது ஒப்பற்ற சேவையை நாம் என்றென்றும் நன்றியுணர்வோடு சிந்திப்பதற்குக் கடமைப்பட்டவர்கள். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவருடைய குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. P. தியாகராசா, திரு. ஆ. சரவணமுத்து ஆகிய இருவரும் தங்களின் ஒப்பற்ற சேவையால் கல்லூரியின் பெருமையை நாடறியச்செய்த நல்லோர்கள். அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம். அவர்களின் குடும்பத்தார்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### புலமைப் பரிசில்கள்

எமது கல்லூரியிலிருந்து ஸ்ரீலங்காப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களுக்கு நிதியுதவி அளித்தற்காகப் புலமைப் பரிசில்கள் வழங்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

1. வைத்தியகலாநிதி த. ஞானனந்தன் / சோமேஸ்வரி புலமைப்பரிசில்
   இப்புலமைப் பரிசில் செல்வன் சி சிவராஜனுக்கு வழங்கப்படுகின்றது. இவர் க. பொ. த. (உயர் தரம்) ஓகஸ்ட் 1981 பரீட்சையில் அகில இலங்கையிலும் மிகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்று முதலாவது தகுதிநிலையைப் பெற்ற மாணவன்.

2. கொழும்பு இந்து சமய சங்கத்தினரால் வழங்கப்படும் மகாராஜா நம்பிக்கை அறக்கொடை புலமைப் பரிசில் 1980 செல்வன் நா. இந்திரமோசன் குருபரனுக்கும் 1981ல் செல்வன் S. பாலச்சந்திரனுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

3. வைத்தியகலாநிதி வே. நடராசா ஞாபகார்த்தப் பரிசில்கள் - செல்வன் S. மனோகரன், செல்வன் M. கணேசன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளன

மேற்படி புலமைப்பரிசில்களை வழங்க உதவியுள்ள அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வித புலமைப் பரிசில் நிதியுதவிகளை மேலும் பல மாணவர்கள் பெறுதற்குப் பழைய மாணவர்கள், கல்லூரியின் நலன்விரும்பிகள் முன்வரவேண்டுமென வேண்டிக் கொள்கின்றோம்.

எம் கல்லூரிப் பழைய மாணவனும், யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியருமான அமரர் சோ. செல்வநாயகம் ஞாபகார்த்தப் பரிசில் வழங்க ரூபா 2000/- மூலதனமாக வை. சி. சி. கு. புகையிலைப் பொருள்கள் உற்பத்தியாளர் உதவியுள்ளார். பழைய மாணவன் பொன்னுத்துரை ஐங்கரநேசன், 1982 தொடக்கம் ஆண்டுதோறும் G. C. E. O/L பரீட்சையில் அதி திறமை பெறும் மாணவனுக்கு தங்கப் பதக்கம் வழங்க முன்வந்துள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.



### சமய பாடப் பரீட்சைகள்

அகில இலங்கைச் சைவ பரிபாலன சபையாரும் கொழும்பு விவேகானந்த சபையாரும் நடாத்தும் பரீட்சையில் எமது மாணவர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றுகிறார்கள்.

சைவ பரிபாலன சபைப் பரீட்சையில் 980, 81-ம் ஆண்டுகளில் முறையே 546, 378 மாணவர்கள் தோற்றி 300 A பிரிவிலும் 346 B பிரிவிலும் மற்றையோர் C பிரிவிலும் சித்தி பெற்றார்கள்.

விவேகானந்தசபைப் பரீட்சையில் 1980-ல் 383 பேர் தோற்றி 247 பேர் A பிரிவிலும் 112 B பிரிவிலும் மற்றையோர் C பிரிவிலும் சித்தி பெற்றனர். 198 இல் சைவ பரிபாலன சபை சமய பாடப் பரீட்சை அகில இலங்கைப் பரிசாக, 10ஆம் வகுப்புக்குரிய தங்கப் பதக்கம் செல்வன் சி. கருணாகரனால் பெறப்பட்டதை வாழ்த்துகிறோம்.

### பாராட்டுகிறோம்

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தமிழ்த் திறன், ஆங்கிலத்திறன் போட்டிகளிற்கு முன்னோடியாகக் கல்லூரி மட்டத்திலே வகுப்பு ரீதியாகப் போட்டிகள் நடாத்தப்பட்டன. பாடசாலை மட்டப் போட்டிகளில் முதன்மை பெற்ற மாணவர்கள் வட்டாரநிலைப் போட்டிகளில் கலந்துகொண்டு பல வெற்றிகளை ஈட்டி இறுதியாக மாவட்ட நிலைப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள். மாவட்டநிலைப் போட்டிகளில் எமது கல்லூரி பெற்ற பெறுபேறுகள் பின்வருமாறு

ஆங்கிலத்திறன் போட்டிகள் (மாவட்டநிலை)

6-ந் தரம்
சொல்வதெழுதல் - 3 ம் இடம்; நாடகம் - 1 ம் இடம்

7-ந் தரம்
எழுத்து – 2ம் இடம், சொல்லுவதெழுதல் - 1ம் இடம், கூட்டுப் பாடல் - 3ம் இடம்

8-ந் தரம்
எழுத்து - 1 ம் இடம்

9-ந் தரம்
வாசிப்பு – 3ம் இடம், கட்டுரை - 2ம் இடம், சொல்வதெழுதல் - 3ம் இடம்

10-ந் தரம்
வாசிப்பு - 1ம் இடம், நாடகம் - 1ம் இடம்

11-ந் தரம்
சொல்வதெழுதல் 3ம் இடம்

தமிழ்த்திறன் போட்டிகள் (மாவட்ட. நிலை)

9ந் தரம்
பாஓதல் 2ம் இடம்

10ந் தரம்
நாடகம் 2ம் இடம்

மேற்படி போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலும் சுவரொட்டிப் போட்டியிலும் எமது கல்லூரி மாணவர்கள் முறையே 2ம், 1ம் இடங்களைப் பெற்றார்கள் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்



அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஞாபகார்த்த ஆங்கிலப் போட்டியில் பங்குபற்றிய செல்வன் V. பிரபாகரன் 1ம் இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றார். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

பண்ணிசைப் போட்டிகள்

சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் மேற்பிரிவில் செல்வன் கு. ஸ்ரீகுமார் தங்கப் பதக்கம் பெற்றார்.

கல்வித் திணைக்களம் நடாத்திய பண்ணிசை மாவட்டப் போட்டிகளில் - மேற்பிரிவுக்குழு நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தையும், மத்திய பிரிவுக்குழு நிகழ்ச்சியில் 1ம் இடத்தையும், தனிப்பாடல் நிகழ்ச்சியில் – 1ம் இடத்தையும் பெற்றது. இதில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களையும் நெறிப்படுத்திய இசை ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

இந்து இளைஞர் கழகம்

| | | |
|---|---|---|
| உப புரவலர் | - திரு. செ. முத்துக்குமாரசுவாமி | |
| தலைவர் | - செல்வன் சி. தவவிநாயகன் | |
| உப தலைவர் | - ,, | பா. நிமலன் |
| இணைச் செயலர்கள் | - ,, | ப. கணேசலிங்கம் |
| | - ,, | பொ. சத்தியமூர்த்தி |
| பெரும் பொருளர் | - திரு. சு. புண்ணியலிங்கம் | |
| பொருளர் | - செல்வன் ப. பராசரன் | |

நாயன்மார் குருபூசைகள், சிவராத்திரி, நவராத்திரி திருக்கேதீஸ்வரத் திருவிழா, வெள்ளிக்கிழமை விசேட பூசைகள், ஞானவைரவ சுவாமி கோவில் தொண்டுகள் ஆகியவற்றை வழமைபோல் நடாத்தி வரும் இக்கழகம் இவ்வாண்டும் விஜயதசமி தினத்தன்று கழக வெளியீ

டாகிய நவமலரை (3வது) வெளியிட்டுள்ளது. சைவ பரிபாலன சபை நடாத்தும் சமயபாடப் பரீட்சை, பண்ணிசைப் போட்டிகள், பிற சைவ சமய ஸ்தாபனங்கள் நடாத்தும் சமயப்போட்டிகளிலும் எமது மாணவர்கள் சிறப்பாகக் கலந்துகொள்ள வழிவகுத்து வருகின்றது. கல்லூரியின் சமய வாழ்வின் உயிர்நாடியாக இக்கழகம் இயங்கி வருதல் பாராட்டுக்குரியதாகும்.

**மாணவ முதல்வர் சபை:**

ஆசிரிய ஆலோசகர்: திரு. பொ. ச. குமாரசுவாமி

சிரேஷ்ட மாணவ முதல்வர்:

செல்வன் நா. இந்திரமோகன் குருபரன் (1980/81)

செல்வன் வி, பத்மநாதசர்மா (1981 82)

செல்வன் K குமாரசூரியர் (1982)

உதவி மாணவ முதல்வர்:

செல்வன் S. K. பாலகுமார்

செல்வன் ம. சிவ்ராமன் (1982)

உறுப்பினர் தொகை 40. இவர்கள் கல்லூரியின் பாரம்பரியம், கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருவதில் நிர்வாகத்துக்குப் பேருதவி புரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு வழிகாட்டி, ஆலோசனைகளை அதிபரின் தலைமையில் இயங்கும் ஆசிரியர் ஒழுக்க சபை வழங்கி வருகின்றது. மாணவ முதல்வர் சபை உறுப்பினர்களுக்கும் வழி காட்டி ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



**உயர்தர மாணவர் ஒன்றியம்**

கல்லூரிகளுக்கிடையேயான விவாத மேடைகளை அமைத்துப் பங்கு கொண்டதோடு, அறிஞர்களை அழைத்து சிறப்புச் சொற்பொழிவுகளையும் நடாத்தியுள்ளனர். பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி, பாரதி பற்றிய பேச்சு, கட்டுரைப் போட்டிகளையும் நடாத்தியுள்ளார்கள். அமரர்களான எமது முன்னைநாள் கல்லூரி ஆசிரியர்களாகிய திரு. மு. கார்த்திகேசன், திரு கு. சுந்தரலிங்கம் ஆகிய இருவர் நினைவைப் பசுமையாக்கும் வகையில் இரு சுற்றுக் கிண்ணங்களையும் ஒன்றியத்தினர் கல்லூரிக்கு வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றி.

**விளையாட்டுத்துறை**

**உதைபந்தாட்டம்;**

முதலாவது குழுவின் பொறுப்பாசிரியராக தி. ஸ்ரீ விசாகராசாவும் பயிற்றுநராக ந, பாலசுப்பிரணியமும் இரண்டாவது குழுவின் பொறுப்பாசிரியராகவும் பயிற்றுனராகவும் இ. துரைசிங்கமும், மூன்றாவது குழுவின் பொறுப்பாசிரியராக சு. புண்ணியலிங்கமும் பயிற்றுநராக எஸ். ஹிட்லரும் பணியாற்றுகிறார்கள்.

1980ல் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் எமது முதலாம், இரண்டாம், மூன்றாம் குழுக்கள் கலந்து கொண்டன. முதலாம் குழு விளையாடிய 5 ஆட்டங்களில் நான்கில் வெற்றியும் ஒன்றில் தோல்வியும் கண்டது. இரண்டாம் குழு ஆடிய 4 ஆட்டங்களில் 2ல் வெற்றியும், 1ல் சமநிலையும், மடைந்தது. 1982ல் யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினரால் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடாத்தப்படவில்லை எனினும் எமது முதலாம், இரண்டாம், மூன்றாம் உதைபந்தாட்டக் குழுக்கள் சிநேக பூர்வமான முறையில் பல ஆட்டங்களில் சிறப்பாக கலந்து கொண்டன. முதலாவது குழு எட்டு ஆட்டங்களில் கலந்து ஐந்தில் வெற்றியும்

இரண்டில் சமநிலையும், கண்டது. இரண்டாவது குழு ஆடிய மூன்று ஆட்டங்களில் இரண்டில் வெற்றியும் ஒன்றில் சம நிலையுமடைந்தது. மூன்றாவது குழு ஆடிய மூன்று ஆட்டங் களில் ஒன்றில் வெற்றியும் ஒன்றில் சமநிலையும் அடைந்தது

| | | | | |
|---|---|---|---|---|
| 1980ல் | 1ம் | குழு | தலைவர் | க. சபேசன் |
| | 2ம் | குழு | ,, | ரி. இரத்தினராசா |
| | 3ம் | குழு | ,, | க. உமாபதி |
| 1981ல் | 1ம் | குழு | தலைவர் | க. பாலகுமார் |
| | 2ம் | குழு | ,, | S. சிறீஸ்கந்தராசா |
| | 3ம் | குழு | ,, | க. உமாபதி |

**கிரிக்கட்: 1981**

19 வயதுக்குட்பட்டோர் 17 வயதுக்குட்பட்டோர் 15வயது குட்பட்டோர் என மூன்று குழுக்கள் முறையே P. மகேந்திரன் S. S. இரத்தினசபாபதி P. மகேந்திரன் பொறுப்பாசிரியர்களா கவும், குழுத்தலைவர்களாக K. விஜயகுலசிங்கம், N. சந்திரகாந் தன்' S ரூபானந்தசிவம் உபதலைவர்களாக, S. K. பாலகுமார் T. சிறிதரன், M. வாசுதேவாவும் பணியாற்றினர்.

முதற்குழு விளையாடிய ஏழு ஆட்டங்களில் இரண்டில் வெற்றியும் நாலில் சமநிலையும் பெற்றனர். இரண்டாவது குழு விளையாடிய நான்கு ஆட்டங்களில் மூன்றில் வெற்றிபெற்றனர் மூன்றாவது குழு ஆடிய ஆறு ஆட்டங்களில் ஐந்தில் வெற்றி யீட்டினர்.

1982ல் குழுத்தலைவர்களாக S. K. பாலகுமார் S. மகேந் திரன் M. திலீபனும் உபதலைவர்களாக .S சுபேந்திரன் Y. ஜெயந்தன் P. கௌரிசங்கரும் பணியாற்றினர் முதற்குழு எட்டு ஆட்டங்களில் மூன்றில் வெற்றியும் நான்கில் சமநிலையும் பெற்றனர். இரண்டாம் குழு ஐந்து ஆட்டங்களில் மூன்றில் வெற்றியிட்டினர். மூன்றாங்குழு விளையாடிய இரு ஆட்டங் களிலும் தோல்வியே கண்டது.



மெய்வல்லுநர்:

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர்கள் | | திரு. T. ஸ்ரீவிசாகராஜா |
| | | ,, இ. துரைசிங்கம் |
| பயிற்றுநர் | | திரு. ந. பாலசுப்பிரமணியம் |
| குழுத்தலைவர் | 1980 | செல்வன் இ. இரவீந்திரன் |
| | 1981 | செல்வன் S. K. பாலகுமார் |

எமது வருடாந்த மெய்வல்லுநர் இல்லப் போட்டிகள் 1980ல் திரு. திருமதி இ. சபாலிங்கம் அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு சிறப்பாக நடைபெற்றன. ஐந்து புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. நாகலிங்கம் இல்லம் சம்பியனாகை வெற்றியீட்டியது. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட யாழ் மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் இவ்வாண்டும் நாம் கலந்து மொத்தமாக 351 புள்ளிகளைப் பெற்று "யூனோ" சம் பியன் சுற்றுக்கிண்ணத்தைக் கைப்பற்றினோம். தொடர்ச்சியாக இச் சம்பியன் கிண்ணத்தைப் பத்தாவது முறையாகப் பெற் றுள்ளோம் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கின்றேன்.

யாம் பெற்ற சிறப்பு வெற்றிகளின் விபரங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| "யூனோ" சுற்றுக்கிண்ணம் | | | — 351 புள்ளிகள் - சம்பியன் |
| "டயனா" | ,, | ,, | — அஞ்சலோட்டம் - சம்பியன் |
| J. S. S. A. | ,, | ,, | — 19 வயதுப்பிரிவு சம்பியன் |
| J. S. S. A. | ,, | ,, | — 17 வயதுப்பிரிவு - சம்பியன் |
| "நியூரோன்" | | ,, | — 16 ,, ,, ,, |
| "பார்சனல்" | ,, | ,, | — 19ம் வயதில் மிகத் திறமையான சுவட்டு நிகழ்ச்சி சாதனைக்காக செல்வன் கி. இரவீந்திரனுக்கு வழங்கப்பட்டது. |
| . S. S. A. | ,, | ,, | — 19ம் வயதுப் பிரிவில் மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்றமைக்காக செல் வன் கி. இரவீந்திரனுக்கு வழங்கப் பட்டது. |

1981-ம் ஆண்டு வருடாந்த மெய்வல்லுநர் இல்லப் போட் டிகள் வைத்திய கலாநிதி திரு. யோகு பசுபதி, திருமதி யோகு பசுபதி அவர்களைப் பிரதம விருந்தினர்களாகக் கொண்டு

மிகச் சிறப்பாக நடைபெற்றன. இரண்டு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. இவ்வாண்டு யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திவந்த மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் நடைபெறவில்லை. பல சிறந்த மெய்வல்லுநர்களும், கல்லூரியும் ஈட்டிவந்த சாதனைகளையும், வெற்றிகளையும் இப் போட்டிகள் நடைபெறுமையினால் இவ்வாண்டு நாம் பெறமுடியவில்லை.

**சதுரங்கம்:**

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | — | திரு. ரி. துரைராசா |
| உதவிப் ,, | — | திரு. க. மகேசன் |
| செயலர் | — | செல்வன் ப. கஜேந்திரன் |
| பொருளர் | — | ,, ம. நிருத்தன் |
| சதுரங்க கழக உறுப்பினர் தொகை | — | 64 |

யாழ்ப்பாணச் சதுரங்கச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சதுரங்கப்போட்டிகளில் நாம் இரு ஆண்டுகளும் கலந்துகொண்டோம். கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகள் இரண்டிலும் சம்பியன்களாக வெற்றியீட்டினோம். அதே சங்கத்தினர் நடாத்திய "Open Chess Tournament" இலும் எமது சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் கலந்துகொண்டார்கள். ம. நிருத்தன் இதில் இரண்டாம் கட்டத்தைப் பெற்றார்.

அகில இலங்கை சதுரங்கக் கழகத்தால் நடாத்தப்பட்ட யாழ் மாவட்டப் போட்டிகளில் எமது கனிஷ்ட, சிரேஷ்ட சதுரங்கக் குழுக்கள், போட்டிகளில் கலந்துகொண்ட சகல பாடசாலைக் குழுக்களையும் தோற்கடித்து இரு பிரிவுகளிலும் சம்பியன் வெற்றிக்கிண்ணங்களைச் சுவீகரித்துக்கொண்டன. கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளிற் கிடையிலான போட்டிகளில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினர்கள் கலந்துகொண்டனர். எமது கனிஷ்ட குழு அகில இலங்கையிலும் 3-ம் இடத்தைப் பெற்றதோடு வெளி மாவட்டச் சம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டது. மேசைகளுக்கான பரிசுகளைச் செல்வன் த. அருணகிரிநாதனும், செல்வன் க. வசந்தனும் பெற்றார்கள். எமது சிரேஷ்ட குழு அகில இலங்கையிலும் ஐந்தாம் இடத்தைப் பெற்றது.



எமது கல்லூரியின் விளையாட்டுத் துறையை ஊக்குவித்துப் பல வெற்றிகளை ஈட்டுவதற்கு உதவி வரும் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் திரு. ந. சோமசுந்தரம், திரு. R. துரைசிங்கம் ஆகியோருக்கும், ஏனைய பல்வேறு பிரிவுப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்களுக்கும், இல்ல ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கட்புல - செவிப்புல மன்றம்

எமது மேற்படி மன்றம் பிரார்த்தனை வேளைகளிலும், கல்லூரியின் விளையாட்டுப் போட்டி, பரிசுத் தினம் போன்ற வைபவங்களிலும்; சமய, இலக்கிய விழாக்களிலும் பெரிதும் உதவி வருகின்றது. மேலும் காலத்திற்குக் காலம் கல்வி சம்பந்தமான சலனப் படங்களையும் மாணவர்களுக்குக் காண்பிப்பதில் பெரிதும் அக்கறை கொண்டு வருகிறது.

அரசினரின் உதவித் திட்டத்தின் கீழ், அண்மையில் மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. இவை, க. பொ. த. (உ/த) விஞ்ஞான மாணவர்களுக்குப் பெரிதும் உதவும் சாதனங்களாக அமைந்துள்ளன. செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெறும் க. பொ த (உ/த) விஞ்ஞான பாடங்கள், மாணவருக்குப் பெரிதும் பயன்பாடுடையனவாகும். இவற்றிற்குப் பொறுப்பாக ஆசிரியர் திரு. சே. சிவராஜாவும் உதவியாக திரு. திசைவீரசிங்கமும், நூலகர் திரு. இராசரெத்தினமும் கடமையாற்றி வருகின்றார்கள்.

## பொலிஸ் படைபயில் குழு

பொறுப்பாசிரியர் - இன்ஸ்பெக்டர் - திரு A மரியதாஸ்
உதவி S. S. இரத்தினசபாபதி

யாழ். இந்துக்கல்லூரி பொலிஸ் படைபயில் குழு களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற தெரிவுப் பாசறையில் பங்குபற்றி மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் பாசறையில் கலந்து கொள்ளும் உரிமையைப் பெற்றது. தெரிவுப் பாசறையில் 4 போட்டிகளில் முதலாவது இடத்தையும் 3 போட்டிகளில் இரண்டாவது இடத்தையும் பெற்றது.

1981-ம் ஆண்டு வைகாசி மாதம் களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக்கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் பாசறையில் கலந்து கொண்டது. இப்பாசறையில் அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகள் பங்குபற்றின. இவ்விறுதிப் பாசறையிலும் யாழ். இந்துக்கல்லூரி பொலிஸ் படைபயில் குழு மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் முதலாவது இடத்தைப் பெற்றது. இவ்விறுதிப் பாசறையில் நடந்த 8 போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரி பெற்ற வெற்றிகளின் விபரம் பின்வருமாறு:-

1. அணிவகுப்பு — முதலாமிடம்
2. உடற்பயிற்சி — முதலாமிடம்
3. பாசறையமைப்பு — முதலாமிடம்
4. சிறந்த ஆணையாளர் — முதலாமிடம்
5. நாடகம் — இரண்டாமிடம்
6. முதலுதவி — இரண்டாமிடம்
7. பொது அறிவு — இரண்டாமிடம்
8. மொத்தப்புள்ளிகள் — முதலாமிடம்

கடந்த 5 பாசறைகளிலும் பாசறை அமைப்புப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் 1ம் இடத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. செல்வன் க. கலையழகன் பொலிஸ்படை பயில் குழுவின் சர்ஜன்டாகக் கடமையாற்றி சிறந்த ஆணையாளராக அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்டமையும் பாராட்டுக்குரியது. பொலிஸ் படை பயிலுநர் குழுவின் பொறுப்பாசிரியர் திரு. மரியதாஸிற்கும் S. S. இரத்தினசபாபதிக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### இராணுவ படைபயில் குழு

கொம்பனிக் கமாண்டர் : கப்ரின் N. சோமசுந்தரம்
பிரிவுக் கமாண்டர் : லெப்டினன் V. சந்தியாபிள்ளை
சிரேஷ்ட பிரிவு சார்ஜன் : R. சிவகுமார்

தியத்தலாவையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் சார்ஜன்ட் R. சிவகுமாரும், கோப்போறல் S. முரளீதரனும் பங்குபற்றினர்.

மதவாச்சியில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் சிரேஷ்ட பிரிவு பங்குபற்றியது.



### சாரணர் குழு:

1980-ம் ஆண்டில் எமது சாரணர் குழு யாழ்ப்பாண மாவட்டப் போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெற்று ரேட்டரி சுற்றுக்கேடயத்தை வென்றது. தொடர்ச்சியாக இவ் வெற்றிக் கேடயத்தை எமது கல்லூரி பத்து ஆண்டுகளாகப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1981-ம் ஆண்டில் யாழ்மாவட்டப் போட்டிகள் நடைபெறவில்லை. திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா குழுத் தலைவராகவும், திரு. பொ. வில்வராசா உதவித் தலைவராகவும், திரு. ப இந்திரசிறி, திரு ப. முருகவேள் உதவிச் சாரண ஆசிரியர்களாகவும் கடமையாற்றுகின்றனர். உதவி மாவட்ட ஆணையாளராகப் பணிபுரியும் எமது கல்லூரி ஆசிரியர் திரு. நா. நல்லையா அவர்கள் வேண்டிய ஆலோசனைகளை வழங்கி எமது குழுவை ஊக்குவித்துள்ளார். 64வது ஆண்டு விழாவை யாழ்மாவட்ட ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தியை பிரதம விருந்தினராகவும், 65வது ஆண்டுவிழாவை முன்னை நாள் கல்லூரியின் சாரணன், கப்டன் ஜனகன் ஸ்ரீகாந்தாவைப் பிரதம விருந்தினராகவும் அழைத்து நடாத்தியுள்ளோம். ஸ்தாபகர்தினப் போட்டிகளில் கலந்துகொண்டு ஏனைய பாடசாலைகளிலும்பார்க்கக் கூடிய பரிசுகளைப் பெற்றோம். கிளிநொச்சி, விசுவமடுவிலும் பயிற்சிப் பாசறைகளை நடத்தினர். எமது குழுவைச் சார்ந்த ஏழு சாரணர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குத் துவிச்சக்கர வண்டிச் சுற்றுலா ஒன்றினை வெற்றிகரமாக நடாத்தினர். 1980/81ம் ஆண்டுகளில் ஏழு சாரணர்கள் ஜனாதிபதி சின்னத்தையும், பத்தொன்பதுபேர் சாரணர் நாடாவினையும் பெற்றனர். திரு. நா. நல்லையா யாழ்ப்பாண உதவி மாவட்ட ஆணையயளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். மேலும் அவர் உலக சாரணீய சம்மேளனத்தினரால் நடாத்தப்பட்ட சாரணர் தலைவர்களுக்கான பயிற்றுநர் பயிற்சியைத் திறம்பட முடித்தபின் உலக சாரணர் சம்மேளன பயிற்றுநர் தலைவராக நியமனம் பெற்றுள்ளார். திரு. பொ. வில்வராசா அவத்தை II பயிற்சியை முடித்துள்ளார். சாரணீயம் யாழ் இந்துக் கல்லூரியில் உன்னதமானதாக நிலைபெற உதவிவரும் ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் யாவருக்கும் எமது நன்றி.

### சென்ஜோன்ஸ் முதலுதவிப் படை:

பிரிவு அத்தியட்சகர் - திரு. சு. சண்முகராசா
பிரிவு உத்தியோகத்தர் - திரு. தி. கமலநாதன் (சிரேஷ்ட அணி)

திரு. சி. கிருஷ்ணகுமார் (கனிஷ்டஅணி)
சார்ஜன் மேஜர் - செல்வன் க. கணநாதன்
அங்கத்தவர் தொகை - 106

கல்லூரி விழாக்கள், ஆலய உற்சவங்கள், பொது வைபவங்கள் ஆகியவற்றில் உற்சாகத்துடன் உதவிபுரிந்து பலரின் பாராட்டையும் பெற்றுவருகின்றனர். நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவ காலத்தில் முதலுதவி அளிப்பதிலும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதிலும் அளப்பரிய தொண்டினைப் புரிந்த எமது உறுப்பினர்களுக்கு, யாழ் மாநகர சபை முதல்வரும், ஆணையாளரும் பாராட்டுப் பத்திரங்களை வழங்கிக் கௌரவித்துள்ளனர். முதலுதவிக் கைநூல் ஒன்றை ஆக்கி வெளியிட்டு, படையின் பிரதம ஆணையாளரது விசேட பாராட்டையும் பெற்றனர். பிரிவு அத்தியட்சகர்கள் இருவரும் சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையில் தகுதிநிலை விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளனர். 1981ம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இம் முதலுதவிப்படை குறுகிய காலத்தில் ஆசிரியர்களின் அயராத முயற்சியாலும் ஊக்கத்தினாலும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுப் பல பாராட்டுதல்களையும் பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். வழிநடத்தும் ஆசிரியர்களுக்கு நன்றி.

யோகாசனம்

பிரதி ஞாயிறுதோறும் ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்பெறும் வகையில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. வெளியார்களும் இவ்வகுப்புகளில் கலந்து பயிற்சி பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. யோகி இராமையாவை ஆத்மீகத் தலைவராகக் கொண்ட இலங்கை பாபாஜீ யோக சங்கத்தின் உறுப்பினர்களாகிய திருவாளர்கள் எம். குணரத்தினம், ஏ. இராமநாதன் ஆகியோர் இப்பயிற்சிகளை நடாத்த உதவிவருகின்றனர். அவர்கள் இருவருக்கும், பொறுப்பாகவிருந்து இதனை நடத்தும் ஆசிரியர் சு. புண்ணியலிங்கம் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

தேசிய சேமிப்பு வங்கி

ஆசிரிய ஆலோசகர் — சே. சிவசுப்பிரமணியசர்மா
முகாமையாளர் — ந. ராஜ்குமார்
காசாளர் — த. பிரதாபன்



எழுது வினைஞர் — ந. சரவணபவன்
கணக்கு வைத்திருப்போர் தொகை — 859
மாணவர் சேமிப்பில் உள்ள தொகை — ரூ. 23,268-80

இச்சேமிப்பு வங்கி சிறந்த முறையில் இயங்குதற்கு உதவி வரும் ஆசிரியர் திரு. சே. சிவசுப்பிரமணிய சர்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

விடுதிச்சாலை :-

பொறுப்பாசிரியர் - திரு. சி. சந்தியாப்பிள்ளை
உதவிப் பொறுப்பாசிரியர்கள் :
திரு. நா. சோமசுந்தரம்
,, S. சீவரத்தினம்
,, ச. க. சங்கரப்பிள்ளை
சிரேட்ட மாணவ முதல்வன் : க. இரவீந்திரன்
உப ,, ,, ,, தி. பஞ்சலிங்கநாதன்
விடுதி மாணவர் ஒன்றியத் தலைவர் : மு. நகுலேஸ்வரன்
,, ,, செயலர் : பா. பாபு

விடுதிப் பொறுப்பாசிரியர்களாகப் பணி புரிந்த திருவாளர்கள் க. சண்முகசுந்தரம், பொ. சிறிஸ்கந்தராசா, உதவியாளர் திரு. க. ஏகாம்பரநாதன் ஆகியோருக்கு எமது நன்றி.

ஆசிரியர் கழகம்

தலைவர் - திரு. க. சிவராமலிங்கம்
உப - தலைவர் - திரு. நா. நல்லையா
செயலர் - திரு. வே. சண்முகலிங்கம்
உப - செயலர் - ஆ. இராசகோபால்
பொருளர் - பிரம்மஸ்ரீ சே. சிவசுப்பிரமணிய சர்மா

ஆசிரியர் நலங் காத்தல், பொது சமய நிறுவனங்கட்டு இயன்றவகை உதவுதல், சாதனைத்திறன் காட்டும் மாணவர்க்குப் பாராட்டு, ஓய்வு, மாற்றம் பெறும் உறுப்பினர்க்குப் பாராட்டு, சிற்றுண்டிச்சாலை நிர்வாகம் ஆகியவற்றை நடாத்திவரும் இக் கழகம் வழமைபோல கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர் - அதிபர்
செயலர் - திரு. க. கனகராஜா
பொருளர் - ,, மு. ஆறுமுகசாமி

கல்லூரி வளர்ச்சிக்கு உதவும் இச்சங்கம் எம் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியதாகும்,

பழைய மாணவர் சங்கம்

தலைவர்: திரு. இராசா விஸ்வநாதன்
செயலர்: ,, W. S. செந்தில்நாதன்
,, பொ. மகேந்திரன்
பொருளர்: ,, ச. பொன்னம்பலம்

கல்லூரியின் பெருமை பேணும் வகையில் இயங்கும் இச்சங்கத்தின் செயற்பாடு எம் பாராட்டுக்குரியது.

பழைய மாணவர் சங்கம் (கொழும்பு)

தலைவர்: திரு. பொ. ச. குமாரசாமி (அதிபர்)
,, (நிறைவேற்றுக் குழு)
திரு. சிவா பசுபதி
செயலர்கள்: ,, S. R. விக்னேஸ்வரன்
,, க. தில்லைநாதன்
பொருளர்: திரு. Y. யோகேஸ்வரன்

அதி உத்தம ஜனாதிபதி J. R. ஜெயவர்த்தன அவர்களின் நிதி உதவியுடன் குமாரசுவாமி மண்டப விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடவேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கீழ்மாடி வேலை பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கிறோம். இப்பாரிய முயற்சியில் எம்மை ஈடுபடுத்திக் கல்லூரி வளர்ச்சியில் அயரா ஊக்கம் காட்டும் எங்கள் மதிப்பிற்குரிய பழைய மாணவர்கள் மாண்புமிகு திருவாளர்கள் வீ. சிவசுப்பிரமணியம், S. சர்வானந்தா, சிவா. பசுபதி (சட்டமா அதிபர்) செயலர்கள், பொருளர் அனைவருக்கும் எம் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



நன்றி:

உயரிய குறிக்கோளுடன், சான்றோர் நிறுவிய இக்கல்லூரியின் நிர்வாகத்தை இனிது நடத்த உதவுவோரை நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டவன். எனது வேலைப் பளுவை பெரிதும் தாங்கி உதவும் துணை அதிபர் திரு. ச. பொன்னம்பலம், ஆசிரியர்கள், கல்லூரி அலுவலர்கள், மாணவ முதல்வர்கள், மாணவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

வேண்டிய போதெல்லாம் ஆலோசனையும் உதவியும் தந்து என்னை ஊக்குவிக்கும் கல்வித் திணைக்களத்தாருக்கும், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவநாயகமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றி.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி நலனில் அக்கறை காட்டும் அபிமானிகள் எல்லோருக்கும் நன்றி.

தனது பொறுப்பான வேலைகள் மத்தியிலும், எமது அழைப்பை ஏற்று வருகை தந்து எம்மைச் சிறப்பித்த பிரதம விருந்தினர், அவர் பாரியார், சபையோர் யாவர்க்கும் என் வணக்கம்.

## பரிசில் பெறுவோர் பட்டியல் 1981

ஆறும் தரம்

| | | |
|---|---|---|
| ஜமுனானந்தா | எஸ் | பொதுத்திறன் |
| முருகவேள் | எம் | இந்துசமயம், தமிழ், சமூகக்கல்வி |
| செங்கோடன் | ஆர் | ஆங்கிலம் |
| சேந்தன் | எஸ் | கணிதம் |
| நிமால்கரன் | என் | விஞ்ஞானம் |
| நகுலேஸ்வரன் | எஸ் | சுகாதாரம் |
| முரளீதரன் | வி | சங்கீதம்,மோட்டார்ப்பொறித்தொழில் |
| சந்திரபாபா | பெ | சித்திரம் |
| தினேஸ் திசைவீரசிங்கம் | கே | மரவேலை |
| சற்சொரூபன் | எஸ் | விவசாயம் |

## ஏழாந் தரம்

| | | |
|---|---|---|
| ஐங்கரன் | எம் | பொதுத்திறன், தமிழ் |
| சிவனேசன் | வி | இந்துசமயம், சமூகக்கல்வி |
| இராகவன் | ஆர் | ஆங்கிலம் |
| சுரேந்திரன் | எஸ் | கணிதம் |
| பாலகுமார் | பி | விஞ்ஞானம் |
| நிரஞ்சன் | கே | சுகாதாரம், விவசாயம், சித்திரம் |
| சுரேந்திரராசா | கே | மோட்டார்ப்பொறித்தொழில் |
| ஜெயசீலன் | ஏ | மரவேலை |
| மனோகரன் | ரி | சங்கீதம் |

## எட்டாந் தரம்

| | | |
|---|---|---|
| லக்ஷ்மன் | பி | பொதுத்திறன், விஞ்ஞானம் |
| நக்கீரன் | எஸ் | இந்துசமயம் |
| இராகவன் | என் | தமிழ் |
| மணிவண்ணன் | பி | ஆங்கிலம் |
| கோகுலன் | கே | சமூகக்கல்வி |
| கோணேஸ் | ரி | சுகாதாரம், சித்திரம், கணிதம் |
| சிவகோணேஸ் | எஸ் | சங்கீதம் |
| சிவகரன் | ஏ | மோட்டார்ப்பொறித்தொழில் |
| சிவபரன் | எம் | விவசாயம் |
| நடேசராஜன் | கே | மரவேலை |

## ஒன்பதாந் தரம்

| | | |
|---|---|---|
| அருணகிரிநாதன் | த | பொதுத்திறன், விவசாயம் |
| சசிகாந்தன் | ஏ | சமயம், விஞ்ஞானம், மோட்டார்ப் [பொறித்தொழில் |
| நிரஞ்சன் | எஸ் | தமிழ் |
| பிரபாகரன் | வி | ஆங்கிலம் |
| குமரேசன் | வி | கணிதம் |
| றமேஸ் | பி | சமூகக்கல்வி |
| சிறீகரன் | ரி | சுகாதாரம் |
| சுதாகரன் | எஸ் | வர்த்தகமும் கணக்கியலும் |
| கணேசமூர்த்தி | என் | மரவேலை |
| செந்தில்குமரன் | ரி | சங்கீதம் |
| ஸ்ரீகாந்தன் | என் | சித்திரம் |



## பத்தாந்தரம்

| | | |
|---|---|---|
| சயந்தன் | எம் | பொதுத்திறன், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம் |
| சிவநாதன் | த | வர்த்தகமும் கணக்கியலும் |
| பொன்னம்பலம் | என் | விவசாயம் |
| தயாபரன் | ரி | மோட்டார்ப்பொறித்தொழில் |
| சிறீகுமார் | கே | சங்கீதம் |
| பிரபாகரன் | கே | சமயம், தமிழ் |

## பதினோராம் தரம்

| | | |
|---|---|---|
| ஜீவகுமார் | கே | பொதுத்திறன் (கணிதம்), இரசாயனம், பிரயோககணிதம் |
| சூரியகுமார் | ரி | பொதுத்திறன் (உயிரியல்) |
| கணேசலிங்கம் | பி | பொதுத்திறன் (கலை), தமிழ், இந்துநாகரிகம் |
| இரத்தினராஜா | த | பொதுத்திறன் (வர்த்தகம்) |
| பொன்னீசன் | எஸ் | பௌதிகம் |
| மோகனதேவன் | கே | தூயகணிதம், பௌதிகம் |
| ஜெயந்த் | எஸ் | ஆங்கிலம் |
| விஜயகுமார் | கே | தாவரவியல் |
| இருபாகரன் | எஸ் | விலங்கியல் |
| விக்னேஸ்வரன் | பா | கணக்கியல் |
| சரவணபவன் | நா | கணக்கியல் |
| குமரகுருபரன் | எம் | பொருளியல் |
| இராஜலிங்கம் | ஆர் | கணக்கியல் |
| இராஜ்குமார் | இ | வர்த்தகமும் நிதியும் |

புவியியல், அளவையியலும் விஞ்ஞானமுறையும், திறமைநிலை இல்லை)

## பன்னிரண்டாந் தரம்

| | | |
|---|---|---|
| சிவராஜன் | எஸ் | பொதுத்திறன் (கணிதம்), பௌதிகம், இரசாயனம், பிரயோககணிதம் |
| கணேசன் | எம் | பொதுத்திறன் (உயிரியல்) விலங்கியல் |
| சிறீபாலன் | ஏ | பொதுத்திறன் (வர்த்தகம்) பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியும், அளவையியலும், விஞ்ஞானமுறையும் |
| சோதிவண்ணன் | ஆர் | தூயகணிதம் |
| செந்தில்குமரன் | க | தாவரவியல், விலங்கியல் |

க. பொ. த. (உயர்தரம்) ஆகஸ்ட் 1981

இரண்டும் அதற்கு மேற்பட்ட பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றோருக்கு வழங்கப்படும் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| சிவராஜன் | எஸ் | தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகம், இரசாயனம் அகில இலங்கையிலும் மிகக்கூடுதலான புள்ளியைப் பெற்றவர் |
| மனோகரன் | எஸ் | தூயகணிதம், பிரயோககணிதம் பௌதிகம் இரசாயனம் |
| சிவோத்தமன் | எஸ் | தூயகணிதம், பிரயோககணிதம் இரசாயனம் |
| கணேசன் | எம் | தூயகணிதம், பௌதிகம், இரசாயனம் |
| பாலச்சந்திரன் | எஸ் | தூயகணிதம், பிரயோகணிதம் |
| ஜெயக்குமார் | வி | தூயகணிதம், பிரயோககணிதம் |
| முரளீதரன் | பி | தூயகணிதம், பிரயோககணிதம் |
| புவிநாயகம் | செ | தூயகணிதம், பிரயோககணிதம் |
| சோதிவண்ணன் | ஆர் | தூயகணிதம், பிரயோககணிதம் |
| சிறீதரன் | வி | தூயகணிதம், பிரயோககணிதம் |
| மணிபவன் | ஜி | தூயகணிதம், பிரயோககணிதம் |

க. பொ. த. (சாதாரணதரம்) டிசம்பர் 1981

ஐந்து பாடங்களிலும் அதற்கு மேலாகவும் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்குரிய விசேட பரிசுகள்

| | | |
|---|---|---|
| சயந்தன் | எம் | ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், சைவசமயம் |

**பண்ணிசை:**

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு : | ந. இராகவன் | முதலாமிடம் |
| | சி. சிவகோணேசன் | இரண்டாமிடம் |
| | ம. இரவிசங்கர் | மூன்றுமிடம் |
| மேற்பிரிவு : | க. பாலமுரளி | முதலாமிடம் |
| | பே. கணேசலிங்கம் | இரண்டாமிடம் |
| | ச. பரணீதரன் | மூன்றுமிடம் |

தமிழ்த் திறன் போட்டிகள் - மாவட்டநிலை

நா. அருட்பிரகாசம் பா ஓதல் 9ம் தரம் 2ம் இடம்
நாடகம் 10ம் தரம் இரண்டாமிடம்



ஆங்கிலத் திறன் போட்டிகள் - மாவட்டநிலை

தரம் 6 சொல்வதெழுதல் மூன்றுமிடம்
எஸ். இராதாகிருஷ்ணன்
ம. மதிமன்னன்
வி. இரவிமோகன்
கே. எஸ். ஜனார்த்தனன்
வி. சிவப்பிரகாசம்

தரம் 6 நாடகம் முதலாமிடம்

காலஞ்சென்ற முன்னைநாள் ஆசிரியர் வி. நாகலிங்கம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் சுற்றுக்கிண்ணம்

தரம் 7 எழுத்து எம். முருகவேள் இரண்டாமிடம்
சொல்வதெழுதல் முதலாமிடம்
கே. சிவராமன்
ரி. ரமேஸ்
கே. ஜனகன்
இ. செங்கோட்டன்
பெ. சந்திரபாபா

தரம் 7 கூட்டுப்பாடல் மூன்றுமிடம்
தரம் 8 எழுத்து ஏ. ஜ. ஸ்ரீரஞ்சன் முதலாமிடம்
தரம் 9 வாசிப்பு பி. லக்ஷ்மன் மூன்றுமிடம்
கட்டுரை பி. மணிவண்ணன் இரண்டாமிடம்
சொல்வதெழுதல் மூன்றுமிடம்
எஸ். கோகுலானந்தன்
எஸ். கிருபானந்தா
பா. மணிவண்ணன்
பி. லக்ஷ்மன்
கே. ரி. கோணேஸ்

தரம் 10 வாசிப்பு வி. பிரபாகரன் முதலாமிடம்
நாடகம் முதலாமிடம்

தரம் 11 சொல்வதெழுதல் மூன்றுமிடம்
ரி. திருவல்லபன்
ரி. குணேந்திரன்
மி. கஜேந்திரா
எஸ். பார்த்திபன்
எஸ். தேவராஜன்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கான ஆங்கில நாடகப் போட்டிகளில் எல்லாப் பிரிவுகளிலும் மிகச்சிறந்த நாடக விருதைப் பெற்றது.

தரம் 10 ''ஜூலியஸ் சீசர்''

காலஞ்சென்ற முன்னைநாள் அதிபரும் ஆங்கில ஆசிரியருமான திரு. மு. கார்த்திகேசன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுவதற்கு க. பொ. த. (உயர்தர) 1981-ம் ஆண்டு மாணவர் ஒன்றியத்தால் வழங்கப் படும் சுற்றுக்கிண்ணம்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான சேர் பொன்னம் பலம் இராமநாதன் நினைவாக நடைபெற்ற ஆங்கிலப் பேச்சுப் போட்டி 1981

வி. பிரபாகரன் — முதலாமிடம் - தங்கப்பதக்கம் பெற்றவர்

**சாரணியம்:**

கீழ்ப்பிரிவு — மிகச்சிறந்த சாரணர் — சி. சிவசுந்தரம்
மேற்பிரிவு — ,, ,, ,, எஸ். சற்குணேஸ்வரன்

ஜனாதிபதியின் சின்னம் பெற்றோர்

எம். பத்மநாதன்
க. கணநாதன்
சி. அருச்சுனா
எஸ். சிவகணேஸ்
அ. அருள்வதனன்
கே. கிருபாகரன்
ரி. தர்மசீலன்

**பொலிஸ்படைபயில் குழு:**

மிகச்சிறந்த புதிய படைபயிலுநர் — இ. நெடுஞ்செழியன்
அகில இலங்கை பொலிஸ்படைபயில்குழு — மிகச்சிறந்த கொமான்டர் பரிசு - கா. கலையழகன்

1980-ம் ஆண்டு இறுதிப் பாசறையில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் பெற்றமைக்காக பரிசில் பெறும் அவ்வாண்டுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பரிசு

கா. கலையழகன் அகில இலங்கைரீதியில் சிறந்த ஆணையாளர்
இ. நெடுஞ்செழியன் பொலிஸ்படைபயில்குழுவில் சிறந்த மாணவன்
இ. இரவீந்திரன்



ப. இந்திரஸ்ரீ
பொ. முருகவேள்
த. உருத்திரகுமார்
த. இரஞ்சன்
ந. ஜெயராஜன்
த. ஸ்ரீகாந்தன்
ஏ. தேவநேசன்
க. ஜெயக்கணேசா
சு. ஸ்கந்தகுமார்
க. பாஸ்கரன்
ந. நந்தகுமார்
சே. நிருத்தாசரன்
கு. நவசீலன்
கி. இந்திரகுமார்
எஸ். மயூரதன்
ந. காண்டீபன்
இ. ரவீந்திரன்
நா. உதயணன்
ஞா. சாரங்கன்
வே. குசலகுமார்
கு. சுபதாஸ்
தி. மகேந்திரராஜ்
தி. இரத்தினேஸ்வரன்
ச. ஜீவானந்தன்
எஸ். லிங்கதாசன்

**சென் ஜோன்ஸ் முதலுதவிப் படை:**

சார்ஜன்ட் மேஜர் — க. கணநாதன்
சார்ஜன்ட் — வி. பிரபாகரன்
எஸ். ஆனந்தராஜா
என். நந்தகுமார்
ஆர். முரளி
ஜீ. ஞானகுமாரன்
கே. ஆர். மயூரன்
எஸ். சற்குணேஸ்வரன்
க. செந்தில்குமரன்
ஜீ. குணதாசன்

யோகாசனம்:

அ. விவேகானந்தி
சோ. சிறீதரன்
து. ஜெயக்குமார்

சமயப்பணி

செல்வன் ப. கணேசலிங்கம்

## விளையாட்டுத்துறை விருதுகள்

### துடுப்பாட்ட விருதுகள் - 1981

மா. விஜயலக்ஷ்மன் (மீளவழங்கல்)
எஸ். சுபேந்திரன் (மீளவழங்கல்)
ச. க. பாலகுமார்
ம. சிவராமன்
கே. ரவீந்திரன்

### மெய்வல்லுநர் விருதுகள் - 1981

ச. க. பாலகுமார் (மீள வழங்கல்)
அ. தயாபரன் (மீள வழங்கல்)
ரி. ஸ்ரீதரன்
வே. நடராசா

### உதைபந்தாட்ட விருதுகள் - 1981

க. சபேசன் (மீள வழங்கல்)
அ. தயாபரன் (மீள வழங்கல்)
ச. க. பாலகுமார்
பி. யோகானந்தா
ரி. சிறீதரன்

### துடுப்பாட்டப் பரிசில்கள் - 1981

#### பதினைந்து வயதுப் பிரிவு

| | |
|---|---|
| துடுப்பாட்டம் | பி. கௌரிசங்கர் |
| பந்துவீசுதல் | தி. அன்பன் |
| பீல்டிங் | வழங்கப்படவில்லை |
| சகல வல்லுநர் | பி. கௌரிசங்கர் |



#### பதினேழு வயதுப் பிரிவு

| | |
|---|---|
| துடுப்பாட்டம் | வை. ஜயந்தன் |
| பந்து வீசுதம் | எம். வாசுதேவன் |
| பீல்டிங் | சி. ரூபானந்தசிவம் |
| சகல வல்லுநர் | ந. சரவணபவன் |

#### பத்தொன்பது வயதுப் பிரிவு

| | |
|---|---|
| துடுப்பாட்டம் | மா. விஜயலக்ஷ்மன் |
| பந்து வீசுதல் | கே. இரவீந்திரன் |
| | ச. க. பாலகுமார் |
| பீல்டிங் | மா விஜயலக்ஷ்மன் |
| சகல வல்லுநர் | மா. விஜயலக்ஷ்மன் |

சதுரங்கம்:

| | |
|---|---|
| கனிட்டபிரிவு | ரி. அருணகிரிநாதன் |
| | க. வசந்தன் |
| சிரேஷ்டபிரிவு | ம. நிருத்தன் |
| | பீ. கஜேந்திரா |

மிகச்சிறந்த விளையாட்டுத்துறை வீரர்களுக்கான சுற்றுக்கிண்ணம்
1980 செ. சுபேந்திரன்
1981 ச. க. பாலகுமார்

பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து அனுமதி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்.

1) வைத்தியகலாநிதி ஞானனந்தன் சோமேஸ்வரி ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் — வழங்குபவர் திரு. ஏ. நமசிவாயம்பிள்ளை
பெறுபவர் செல்வன் சி. சிவராஜன் - பொறியியல் பீடம்

2) வைத்தியகலாநிதி வி. நடராஜா ஞாபகார்த்த புலமைப் பரிசில்கள்
வழங்குபவர் - திருமதி சி. நடராஜா
பெறுபவர்கள் - செல்வன் ச. மனோகரன் - பொறியியல் பீடம்
செல்வன் எம். கணேசன் - மருத்துவ பீடம்

3) மகாராஜா நம்பிக்கை அறக்கொடைப் புலமைப்பரிசில்
வழங்குபவர் - கொழும்பு இந்து வித்தியாவிருத்திச் சபை
பெறுபவர்கள்: செல்வன் நா இந்திரமோகன் குருபரன் (1980)
செல்வன் எஸ். பாலச்சந்திரன் (1981)

மிகச் சிறந்த மாணவருக்கான பரிசில்
1980 - நா. இந்திரமோகன் குருபரன்
1981 - சி. சிவராஜன்

## பரிசுகள் வழங்கியோர் 1982

| வழங்கியோர் | ஞாபகார்த்தம் |
|---|---|
| சித. மு. பசுபதிச்செட்டியார் ஞாபகார்த்த நிதி | |
| | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் |
| | சின்னத்தம்பி நாகலிங்கம் |
| | தாமோதரம்பிள்ளை செல்லப்பா |
| | வில்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை |
| | என். எஸ். பொன்னம்பலபிள்ளை |
| கதிர்காமுச் செட்டியார் | சிதம்பர சுப்பையாச் செட்டியார் |
| | சிதம்பர சுப்பையாச் செட்டியார் |
| முத்துக்குமாருச் செட்டியார் | விசுவநாதர் காசிப்பிள்ளை |
| | ஆர். எச். லீம்பிறகன் |
| | பி. குமாரசாமி |
| | பி. அருணாசலம் |
| | முத்துக்குமாருச் செட்டியார் பசுபதிச் செட்டியார் |
| வைத்தியகலாநிதி V. நடராஜா பரிசு நிதி | வைத்தியகலாநிதி V. நடராஜா (சுகாதார வைத்திய அதிகாரி) |
| திருமதி ம. கதிர்காமலிங்கம் | கணவர் க. இ. கதிர்காமலிங்கம் (முடிக்குரிய சட்டத்தரணி) |
| திருமதி வ. அருளம்பலம் | கணவர் அ. அருளம்பலம் (சட்டத்தரணி |
| திரு. சிவா பசுபதி | தகப்பனார் V. T. பசுபதி |
| திரு. மு. பசுபதி | தகப்பனார் V. T. பசுபதி |
| வைத்திய கலாநிதி யோகுபசுபதி | தகப்பனார் V. T. பசுபதி |
| திரு. ஜனகன் ஸ்ரீகாந்தா | தகப்பனார் ம. ஸ்ரீகாந்தா |
| திருமதி உ. சோமசேகரம் | கணவர் சிவ. உ. சோமசேகரம் |
| திரு. சி. விசுவநாதன் | யா. இ. க. அதிபர் V.M. ஆசைப்பிள்ளை |
| கலாநிதி S. கணேசலிங்கம் | பேராசிரியர் பே. கனகசபாபதி |
| திரு. W. S. செந்தில்நாதன் | புத்துவாட்டி சோமசுந்தரம் |



| | |
|---|---|
| திரு. பொ. இரகுபதி | பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B.O.L. |
| திரு. சி. செ. சோமசுந்தரம் | தகப்பனார் சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் |
| | தாயார் சி. திருவேங்கடவல்லி |
| | தமையனார் சி. திருச்சிற்றம்பலம் |
| திரு. A. வைத்தியலிங்கம் | யா. இ. க. ஆசிரியர் A. சரவணமுத்து (தமையனார்) |
| திரு. இ. கனகலிங்கம் | யா. இ. க. ஆசிரியர் V. இராமகிருஷ்ணன் |
| திரு. P. கனகரத்தினம் | மனைவி திருமதி P. கனகரத்தினம் |
| திரு. S. செல்வராசா | யா. இ. க. ஆசிரியர் C.K சுவாமிநாதன் |
| | திருமதி சிவபாக்கியம் சுவாமிநாதன் |
| திரு. R. R. தங்கராசா | சட்டத்தரணி V. M. சரவணமுத்து |
| | திருமதி மீனாம்பிகை சரவணமுத்து |
| திரு. D. N. S. K. தங்கராசா | சட்டத்தரணி சரவணமுத்து தங்கராசா (தகப்பனார்) |
| திரு. N. சோமசுந்தரம் | யா. இ. க. ஆசிரியர் P. தியாகராசா |
| திருமதி B. சிவதாசன் | யா. இ. க. ஆசிரியர் C. M. குலசிங்கம் (தகப்பனார்) |
| திரு. வி. கயிலாசபிள்ளை | அருணாசலம் செல்லப்பா ஜே. பி. |
| | தந்தை க. விசுவநாதர் |
| | தாய் விசுவநாதர் பார்பதியார் |
| திரு. வ. சுப்பிரமணியம் | மாமன் வைத்தியகலாநிதி சி. சுப்பிரமணியம் O B. E. |
| வைத்தியகலாநிதி வே. யோகநாதன் | தந்தை கந்தையா வேலுப்பிள்ளை |
| | தாய் வேலுப்பிள்ளை மாணிக்கம் |
| திரு. ஷண்முக குமரேசன் | தந்தை ஆ. இ. ஷண்முகரத்தினம் |
| | தமையன் ஷண்முகரத்தினம் சுந்தரேசன் |
| திரு. வ. மகாதேவன் | தந்தை மு. வயித்திலிங்கம் |
| | பெரிய தந்தை டாக்டர் மு. வைத்திலிங்கம் மலேசியா |
| வைத்தியகலாநிதி க. சிவஞானரத்தினம் | தந்தை வைத்தியகலாநிதி சி. கனகரத்தினம் |

| | |
|---|---|
| நீதியரசர் சு. சர்வானந்தா | தந்தை N. சுப்பையா |
| திரு. இ. சபாலிங்கம் | தாய் இ. இலட்சுமிப்பிள்ளை |
| திரு, T. S. கதிர்காமநாதன் | தாய் விஜயலட்சுமி<br>ஆசிரியர் மு. கார்த்திகேசன் |
| திரு. T. விஜயானந்தன் | தாய் விஜயலட்சுமி<br>ஆசிரியர் மு. கார்த்திகேசன் |
| திரு T. D. யோகநாதன் | தாய் விஜயலட்சுமி<br>ஆசிரியர் மு. கார்த்திகேசன் |
| திரு. ம. அமிர்தலிங்கம் | தனிநாயகமுதலி நெடுந்தீவு |
| யா. இ க. கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் உதவிச் சங்கம் | K. அருணாசலம் |
| திரு. பொ. ச. குமாரசுவாமி | யா. இ. க. அதிபர் ஏ. குமாரசாமி |
| திரு. ச. பொன்னம்பலம் | தந்தை பொ. சரவணமுத்து |
| திரு. த. சேனாதிராசா | யா. இ. க. அதிபர் C. சபாரத்தினம்<br>A. தனபாலசிங்கம் (சட்டத்தரணி) |
| திரு. க. சிவராமலிங்கபிள்ளை | மாமன் க. செல்லத்துரை<br>தாய் கணபதிப்பிள்ளை செல்லம்மா<br>மாமி திருஞானம் நாகபூரணி<br>நண்பன் க. சுந்தரலிங்கம் |
| திரு S சண்முகராசா | தங்கை உமாவதி சுப்பிரமணியம் |
| திரு. செ. ஜெகானந்தகுரு | தாய் செல்லையா சரஸ்வதி |
| திரு. சே. சிவராஜா | தந்தை வெ. சேனாதிராஜா<br>தமையன் சே. சிவப்பிரகாசம் |
| திரு. வே. யோசவ் | தந்தை சஞ்சு வேணாட்<br>தாய் மரியப்பிள்ளை வேணாட் |
| திரு. இ. மகாதேவா | தந்தை அப்பர்க்குட்டியர் இளையப்பா<br>தாய் இளையப்பா விசாலாட்சி |
| திரு. P. மகேஸ்வரன் | பாட்டன் கா. சங்கரப்பிள்ளை |
| ஸ்ரீ. சே. சிவசுப்பிரமணிய சர்மா | தாய் ஜெகதாம்பாள் |
| திரு. கா. மாணிக்கவாசகர் | தந்தை காசிநாதபிள்ளை |
| திருமதி க. ஆறுமுகம்தம்பி | கணவர் ஆ. க. ஆறுமுகம்தம்பி |
| திரு. மா. புவனேந்திரன் | முன்னாள் கோப்பாய்ப் பிரதிநிதி<br>மு. பாலசுந்தரம் |



| | |
|---|---|
| செல்வி த. செல்லத்துரை | தம்பி செ. ஸ்ரீ சண்முகநாதன் |
| திருமதி ப. மகாதேவா | தந்தை வ. இராசா |
| திரு. அ. கருணாகரர் | தாய் மாரிமுத்துப்பிள்ளை அப்பாத்துரை |
| திரு. பொ. மகேந்திரன் | தந்தை S. பொன்னம்பலம் |
| வை. சி. சி. கு. புகையிலைப் பொருள்கள் உற்பத்தியாளர் | பேராசிரியர் S. செல்வநாயகம் |

## பரிசுகள் வழங்கியோர் 1982

1. திரு. சி. நாகராஜா
2. வைத்தியகலாநிதி ந. நடேசன்
3. திரு. இராசா விசுவநாதன்
4. வைத்தியகலாநிதி P. சச்சிதானந்தன்
5. திரு. மு. இ. அம்பலவாணர்
6. திரு. வி. கணேசலிங்கம்
7. திரு. R. நாகரத்தினம்
8. திரு R. குணரத்தினம்
9. திரு D. சீனிவாசகம்
10. திரு. V. சுந்தரதாஸ்
11. திரு. மு. பசுபதி
12. திரு. V. விஜயவேள்
13. திரு. ம. சி. பிரான்சிஸ்
14. வைத்திய கலாநிதி S. பொன்னம்பலம்
15. திரு. ச. சூரியகுமாரன்
16. வைத்திய கலாநிதி ப. விஜயதுரை
17. திரு. T. சோமசுந்தரம்
18. திரு. A. சிவலிங்கம்

* * *

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்

உ

## கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல் லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் — வாழிய

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளமே மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே — பல
கலைமலி கழகமும் இதுவே தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவேம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே!
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க

வாழ்க! வாழ்க!! வாழ்க
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.